

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | ஏப்ரல் 11, 2019 | புரட்சி 18 | முழக்கம் 13 | விலை: ரூ.3.00

## பகுத்தறிவாளர்கள் – சிந்தனையாளர்களைத் தண்டிக்கத் துடிக்கும் பா.ஜ.க. ஆட்சி மீண்டும் தொடரக் கூடாது

# 154 விஞ்ஞானிகள் அறைகூவல்

நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலில் பகுத்தறிவு சிந்தனையற்றவர்களுக்கு எதிராகவும், சாதி, மதம், இனம், மொழி, பிராந்தியம் ரீதியாக, மக்களைத் துண்டாட நினைப்பவர்களுக்கு எதிராகவும் வாக்களிப்போம் என்று நாடு முழுவதுமுள்ள விஞ்ஞானிகள் அறைகூவல் விடுத்துள்ளனர்.

கல்வியாளர்கள், வழக்கறிஞர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் அறிவியலாளர்களின் கூட்டமைப்பான இந்தியக் கலாச்சாரக் கழகம், இந்தியக் கல்வி அ றிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், இந்தியப் புள்ளியல் நிறுவனம், தேசிய உயிரியல் அறிவியல் மையம், இந்திய தொழில்நுட்பக் கழகம் மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றும் 154 விஞ்ஞானிகள் இணைந்து இந்த அறைகூவலை விடுத்துள்ளனர்.

அமித் ஆப்தே, சோரப் தலால், ரமா கோவிந்த ராஜன் உள்ளிட்ட பல விஞ்ஞானிகள் அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர். அதில் அவர்கள் கூறியிருப்பதாவது:

“மக்களை மதத்தின் பெயராலும், சாதியின் பெயராலும், மொழியின் பெயராலும், வாழும் பகுதியின் பெயராலும், பாலினத்தின் பெயராலும் மக்களுக்கு எதிராக பாகுபாட்டை ஏற்படுத்தி அவர்களைக் கொலை செய்பவர்களை நாம் நிராகரிக்க வேண்டும். மேலும் இத்தகைய நடைமுறைகளை ஊக்குவித்து வருபவர்களையும் நாம் நிராகரித்தாக வேண்டும்.

விஞ்ஞானிகள், சமூக செயற்பாட்டாளர்கள், பகுத்தறிவாளர்கள் வேட்டையாடப்பட்டனர். கொடுமைக்கு ஆளாகினர். தணிக்கைக்கு உட்படுத்தப் பட்டனர். சிறையில் தள்ளப்பட்டனர். எல்லா வற்றுக்கும் மேலாக படுகொலை செய்யப்பட்டனர். இது நம் நாட்டின் எதிர்காலமாக இருக்கக் கூடாது. இவற்றை ஆதரிக்கும் செயல்களையும் நபர்களையும் நாம் நிராகரிக்க வேண்டும்.

மோடி அரசானது, முற்போக்குச் சிந்தனையாளர்கள், பகுத்தறிவாளர்கள் மற்றும் அறிவுஜீவிகளை தண்டிக்க நினைக்கிறது. அதை நாம் அனுமதிக்கக் கூடாது. வேற்றுமையில் ஒற்றுமை என்பதே நமது குடியரசின் பலம். அந்த அடிப்படையையே அழிக்க நினைப்பவர்களுக்கு வாக்களிக்கக் கூடாது.

எனவே, இந்தியாவின் அனைத்துக் குடிமக்களுக்கும் ஒரு கோரிக்கை விடுக்கிறோம். தயவுசெய்து புத்திசாலித்தனத்துடன் வாக்களியுங்கள். ஆதாரத்துடனான சொற்பொழிவுகளைக் களங்கப்படுத்துவதற்கும், பகுத்தறிவுச் சிந்தனையை அவமதிக்கும் போக்கிற்கும் முற்றுப்புள்ளி வையுங்கள்.

மக்களிடையே அறிவியல் மனோபாவத்தை உயர்த்திப் பிடிப்பதற்கு உறுதிபூண்டுள்ள நம் அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.”

இவ்வாறு விஞ்ஞானிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அறிக்கையின் முடிவில், “எங்கே நமது மனம் பயமின்றி தலைநிமிர்ந்து நிற்கிறதோ, எங்கே அறிவு சுதந்திரமாக உள்ளதோ, எங்கே உலகம் உடைந்து துண்டாடப்படவில்லையோ, அங்கு குறுகிய எண்ணங்கள் இருக்காது” என்ற மகாகவி ரவீந்திரநாத் தாகூரின் புகழ்பெற்ற வரிகளையும் விஞ்ஞானிகள் நினைவுபடுத்தியுள்ளனர்.

ஐஐஎஸ்இஆர்-ஐ சேர்ந்த பேராசிரியர் சத்யஜித் ராத் மற்றும் ஐஎஸ்ஐயைச் சேர்ந்த ராகுல் ராய் ஆகியோர் இந்த அறிக்கையை உருவாக்கியுள்ளனர்.

இந்தியாவின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டுமானால், மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. தோற்கடிக்கப்பட வேண்டும் என்று, இந்தியாவின் புகழ்பெற்ற 100க்கும் மேற்பட்ட திரைப்படப் படைப்பாளிகளும், “வெறுப்பு அரசியலுக்கு எதிராக வாக்களிப்போம்; பன்முகக் கலாச்சார மனிதர்களின் சமத்துவத்தை நிலை நிறுத்துவோம்” என்று எழுத்தாளர்கள் 210 பேரும் ஏற்கெனவே தனித்தனியாக அறிக்கை வெளியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ‘நெல்ப்’ முறையை மாற்றி ‘ஹெல்ப்’ முறையைக் கொண்டு வந்தது யார்?

மீத்தேன், ஷேல்கேஸ் போன்ற பூமிக்கடியில் உள்ள இயற்கை எரிவாயுக்களை எடுப்பதற்கு தனித்தனியாக அனுமதி பெறும் ‘நெல்ப்’ முறையை மாற்றி ‘ஹெல்ப்’ எனப்படும் ஒற்றை உரிமத்தை பெற்றால் போதும்; ஹைட்ரோ கார்பன் எடுப்பதற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டு பூமிக்கடியில் உள்ள எந்த இயற்கை வளங்களை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம்.

பன்னாட்டு முதலாளிகள் இந்திய இயற்கை எரிவாயு வளங்களை கொள்ளையடிப்பதற்காக, ‘தளர்த்தப்பட்ட திறந்தவெளி அனுமதி திட்டம்’ என்ற புதிய கொள்கையின்படி எண்ணெய் வயல்களை மத்திய ஹைட்ரோ கார்பன் இயக்குநரகம் அடையாளம் கண்டு அதை ஏலம் விட்டுக் கொண்டுள்ளது. இதில் பெயரளவிற்கு ஒரு சில இடங்களை மட்டும் பொதுத் துறை நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்துவிட்டு பெரும்பாலான இடங்களை தனியார், பன்னாட்டு கம்பெனிகளுக்கு வழங்கியுள்ளது.

உதாரணத்திற்கு 28.8.2018இல் நாடு முழுவதும் 55 இடங்களை ஏலத்திற்கு விட்டதில் வேதாந்தா நிறுவனம் 41 இடங்களைப் பெற்றுள்ளது. எச்.ஓ.இ.சி. ஒரு இடம் பெற்றுள்ளது. மீதியுள்ள 13 இடங்கள்தான் பொதுத்துறை நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆக மொத்தமுள்ள 55 இடங்களில் பன்னாட்டு கம்பெனிகளுக்கு 42 இடங்களும், பொதுத் துறைக்கு 13 இடங்கள் மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே மோடியின் அப்பட்டமான கார்ப்பரேட் பாசம் இதிலிருந்து வெளிச்சமாகிறது.

மேலும் நூற்றுக்கணக்கான இடங்களில் பன்னாட்டு கம்பெனிகளுக்கு ஒதுக்க மோடி அரசு திட்டமிட்டுள்ளது.

## பா.ஜ.க. ஆட்சியின் ‘நமோ டி.வி.’ மோசடி

தேர்தல் நடத்தி விதிமுறைகளை காற்றில் பறக்கவிட்டு வருகிறது மோடி ஆட்சி.

‘தூர்தர்ஷன்’ என்ற அரசு தொலைக்காட்சி சேவையும் அகில இந்திய வானொலியும் பா.ஜ.க.வின் தேர்தல் பிரச்சார மேடைகளாக மாற்றப்பட்டுள்ளன. அதுமட்டுமின்றி நடத்தை விதிகள் அமுலுக்கு வந்த பிறகு விதிகளுக்கு மாறாக ‘நமோ டிவி’ என்ற தொலைக்காட்சி சேவையை பா.ஜ.க. தொடங்கியிருக்கிறது.

ஒரு தொலைக்காட்சி சேவை தொடங்கப்பட வேண்டுமானால் அதற்கு மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சகத்தின் ஒப்புதல் பெற வேண்டும். அந்த ஒப்புதல் ஏதும் பெறாமலே இந்த ‘நமோ டிவி’ தொடங்கப்பட்டு விட்டது. மோடியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள் ஒளிபரப்பாகி வருகின்றன. பா.ஜ.க. ஆட்சியின் சாதனைகள் தம்பட்டமடிக்கப்படுகின்றன. மார்ச் 31ஆம் தேதி தொடங்கப்பட்ட இந்த ‘டி.வி.’, ‘டிடிஎச்’ (Direct to Home) அலைவரிசையைப் பயன்படுத்தி வருகிறது. எதிர்கட்சிகள் இதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

‘இது தனியார் விளம்பர சேவை; தொலைக்காட்சியல்ல’ என்று விளக்கம் கூறுகிறது பா.ஜ.க. இந்தத் தொலைக்காட்சி உரிமையாளர் யார்? எந்த அமைப்பின் பெயரால் பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற கேள்விக்கு பதில் இல்லை. அனைத்தும் மோடியால் இரகசியமாக செய்யப்பட்டுள்ளது. 2005ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தொலைக்காட்சி சேவை திருத்த சட்டத்துக்கு இது முரணானது.

‘டி.டி.எச்.’ சேவையைப் பயன்படுத்தும் தொலைக்காட்சிகள் அதற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை அரசுக்கு செலுத்த வேண்டும். அதையும் ‘நமோ டிவி’ கட்டவில்லை.

‘நமோ டி.வி.’ பா.ஜ.க.வின் தேர்தல் பிரச்சார சேவை, அது ‘டிவி’ என்ற வரம்புக்குள் வராது என்று பா.ஜ.க. வாதாடுவது உண்மை என்றால் இந்தப் பிரச்சார சேவையை பா.ஜ.க.வின் தேர்தல் செலவு கணக்குக்குள் கொண்டு வரப்படுமா என்று எதிர்க்கட்சிகள் நியாயமான கேள்வியை எழுப்புகின்றன.

# தேர்தல் நன்கொடை திரட்ட பா.ஜ.க. ஆட்சி கொண்டு வந்த கொல்லைப்புற சட்டத்திருத்தம்

எதிர்க்கட்சிகளுக்கு எதிராக வருமான வரித்துறையை கூச்சநாச்சமின்றி பயன்படுத்தி வருகிறது மோடி ஆட்சி. தேர்தல் ஆணையமோ, மல்லிகைப் பூவில் அடிப்பதுபோல் பா.ஜ.க.வினருக்கு ‘காதல் கடிதங்களை’ எழுதிக் கொண்டிருக்கிறது. அவ்வளவு நேர்மையாக ஆணையம் செயல்படுவதுபோல் மக்கள் காதில் பூ சுற்றுகின்றனர்.

தேர்தல் களத்தை நேர்மையாக நடத்துவதாக நாடகம் போடும் மோடி ஆட்சியின் முகத்திரையைக் கிழிக்கும் ஒரு செய்தியை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இப்போது உச்சநீதிமன்றத்தில் ஒரு வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. அது ‘தேர்தல் பத்திரம்’ தொடர்பான வழக்கு. அது என்ன தேர்தல் பத்திரம்? கடந்த ஆண்டு மத்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லி அறிமுகப்படுத்திய திட்டம். இதன்படி அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை தரும் நிறுவனங்கள் ரொக்கமாகப் பணம் தருவதற்கு பதிலாக ஒரு குறிப்பிட்ட வங்கியில் மின்னணு எந்திரம் வழியாக நன்கொடை செலுத்தி தொகைக்கான பத்திரத்தைப் பெற்று அந்தப் பத்திரத்தை கட்சிகளுக்கு நன்கொடையாக வழங்கலாம். இதற்காக இந்திய ஸ்டேட் வங்கியில் ஒரு கோடி ரூபாய் வரையில் பத்திரங்கள் கிடைக்கும். நன்கொடைக்கு உச்சவரம்பு ஏதும் இல்லை. நன்கொடையாளர் யார் என்பதும் இரகசியமாகப் பாதுகாக்கப்படும். இதுதான் நிதியமைச்சகம் அறிமுகப்படுத்திய திட்டம்.

தேர்தல் பிரதிநிதித்துவ சட்டம் 1951இன்படி அதன் 29சி பிரிவு, என்ன கூறுகிறது? ஒரு அரசியல் கட்சிக்கு இருபதாயிரத்துக்கும்மேல் நன்கொடை தரப்படுமானால், அக்கட்சி அந்த நன்கொடை எங்கிருந்து வந்தது என்பதை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். 2017ஆம் ஆண்டு பா.ஜ.க. நிதியமைச்சகம் கொண்டு வந்த திருத்தத்தின்படி நன்கொடை எங்கிருந்து வந்தது என்பதை அறிவிக்கத் தேவையில்லை.

உச்சநீதிமன்றத்தில் இத்திட்டத்தை எதிர்த்து நடக்கும் வழக்கு விசாரணையில் தேர்தல் ஆணையமும் ஒரு எதிர் மனுதாரராக இருக்கிறது. தேர்தல் நன்கொடை திரட்டுவதில் வெளிப்படைத் தன்மை வேண்டும் என்ற ஆணையத்தின் குறிக்கோளை முறியடிக்கிறது இத்திட்டம் என்று ஆணையம் உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளது.

வெளிநாட்டு நிறுவனங்கள் கட்சிகளுக்கு நன்கொடை வாங்கும் சட்டத்திலும் (Foregin Contribution Regulation - FCRA) திருத்தம் கொண்டு வந்து விட்டார்கள். வெளிநாடு நன்கொடைகளை யார் வழங்கியது? எவ்வளவு தொகை என்பதை வெளிப்படுத்தத் தேவையில்லை.

இந்த சட்டத்திருத்தங்கள் நிதி மசோதாவின் கீழ் கொண்டு வரப்பட்டு நாடாளுமன்றத்தில் அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன. நிதி மசோதாவின் கீழ் ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டால் மாநிலங்களவை ஒப்புதல் தேவை இல்லை. மாநிலங்களவையில் பா.ஜ.க.வுக்கு மெஜாரிட்டி இல்லை என்பதால் முக்கியத்துவம் பெற்ற இந்த சட்டத்திருத்தங்களை நிதி மசோதாவின் கீழ் முடக்கிவிட்டது மோடி ஆட்சி.

இப்போது இந்த ‘தேர்தல் பத்திர’ முறை அமுல்படுத்திய பிறகு ‘இந்திய ஸ்டேட் வங்கி வழியாக’ எவ்வளவு தொகைக்கு பத்திரம் வாங்கப்பட்டுள்ளது என்று தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்கப்பட்டது.

2019ஆம் ஆண்டில் இரண்டு மாதத்தில் மட்டும் ரூ.1716 கோடிக்கு பத்திரங்கள் விற்பனையாகியுள்ளன. தொழிலதிபர்கள் நிறைந்த நகரமான மும்பையில் 2019இல் ரூ.495.6 கோடிக்கு பத்திரங்கள் விற்பனையாகியுள்ளன. இங்குதான் பத்திர விற்பனை அமோகமாக நடந்துள்ளது. (அதாவது 28.9 சதவீதம்)

இந்த உரிமை இப்போது ‘இந்திய ஸ்டேட் வங்கி’க்கு மட்டும் அரசு வழங்கியிருக்கிறது. அரசு முழுக் கட்டுப்பாட்டில் செயல்படக்கூடிய ‘சிறப்பு உரிமைகள்’ பெற்ற வங்கி இது.

அனைத்துக் கட்சிகளும் நன்கொடை பெறலாம் என்று கூறப்பட்டாலும் இந்தத் திட்டத்தில் பயனடைந்தது யார்? இது மிக முக்கியமான கேள்வி.

பா.ஜ.க.வின் 2017-18 வரவு செலவு தணிக்கை அறிக்கையில் அதற்கான விடை இருக்கிறது.

இத்திட்டத்தின் மூலம் 94.6 சதவீதம் நிதி பா.ஜ.க.வின் கஜானாவுக்குள் வந்து சேர்ந்திருக்கிறது என்ற தகவல் பா.ஜ.க.வின் வரவு செலவு தணிக்கை அறிக்கையில் பதிவாகியுள்ளது.

தேர்தல் அறிவிப்புக்குப் பிறகு வருமான வரித் துறையை ஒரு இராணுவமாகப் பயன்படுத்தி எதிர்க் கட்சிகளை முடக்கும் பா.ஜ.க. ஆட்சி தனக்கான வெளிநாட்டு உள் நாட்டு தொழில் நிறுவனங்களின் தேர்தல் நிதி மழை போல கொட்டுவதற்கு உரிய சட்டப் பாதுகாப்பைத் தேடிக் கொண்டு விட்டது.

இதுதான் மோடி ஆட்சியின் யோக்கியதை!

**(தகவலுக்கு ஆதாரம் : ஏப்.7, 2019 ஆங்கில ‘இந்து’ நாளேடு, பக்.14இல் வெளி வந்துள்ள கட்டுரை)**

# ஆர்.எஸ்.எஸ்.சின் சதி : மு.க. ஸ்டாலின் விளக்கம்

திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, கிருஷ்ணன் குறித்துப் பேசியதாக வன்முறையில் இறங்கியிருப்பது ஆர்.எஸ்.எஸ். சதி என்று மு.க.ஸ்டாலின் கூறியிருக்கிறார். இது குறித்து அவர் அளித்த பேட்டி:

*கேள்வி: திராவிடர் கழகம் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் கி.வீரமணி அவர்கள் கிருஷ்ணனைப்பற்றி தவறாகப் பேசியதாக சொல்கிறார்களே, அதை தி.மு.க. ஏற்றுக்கொள்ளுமா?*

**மு.க.ஸ்டாலின்:** அவர் தேர்தல் பிரச்சாரத்தில் பேசிய பேச்சல்ல அது. ஏற்கெனவே அவர் திராவிடர் கழகத் தலைமை அலுவலகமாக இருக்கக்கூடிய பெரியார் திடலில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய பேச்சாகும். யாரையும் கொச்சைப்படுத்தியோ, கேவலப்படுத்தியோ பேச வேண்டும் என்கிற நோக்கத்தோடு பேசவில்லை. அவர் சில உதாரணங்களைச் சொல்லி பேசியிருக்கிறார்.

அதை இன்றைக்கு சில ஊடகங்கள், ஆர்.எஸ்.எஸ்., போன்ற அமைப்புகள் தேர்தல் நேரத்தில், அதனை தவறாகத் திரித்து, மக்களிடத்தில் தவறான பிரச்சாரத்தினைக் கொண்டு போக வேண்டும் என்கிற நோக்கில் திட்டமிட்டு செய்திருக்கின்ற சதி இது.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் தெளிவாக சொல்லவேண்டுமென்றால், பேரறிஞர் அண்ணாவின் கொள்கை என்பது, “ஒன்றே குலம், ஒருவனே தேவன்” என்பதுதான். அதேபோல, தலைவர் கலைஞர் அவர்கள்கூட பராசக்தி திரைப்படத்தில் மிகத் தெளிவாக ஓரிடத்தில் குறிப்பிட்டிருப்பார்கள்.

“கோவில்கள் கூடாது என்பது தி.மு.க.வின் கொள்கையல்ல; கோவில்கள் கொடியவர்களின் கூடாரமாகி விடக் கூடாது” என்பதுதான் கொள்கை என்பதைத் தெளிவாகச் சொல்லியிருப்பார். அந்த அடிப்படையில்தான் இன்றைக்கும் தி.மு.க. இருக்கிறது.

இந்துக்களைப் பொறுத்தவரைக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் 90 சதவிகிதம் இந்துக்கள் இருக்கிறார்கள். இன்னும் வெளிப்படையாக சொல்லவேண்டுமானால், என்னுடைய துணைவியார்கூட காலையிலும், மாலையிலும் இடைவிடாமல் ஒவ்வொரு நாளும் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒருநாளும் அவரை நான் ஆலயத்திற்குச் செல்லக்கூடாது என்றோ, அது தவறு என்றோ சொல்லியது இல்லை.

ஆகவே, ஆர்.எஸ்.எஸ். போன்ற அமைப்புகள் அதனைத் தேர்தலுக்காக நடத்தும் பிரச்சாரம், வேண்டு மென்றே திட்டமிட்டு நடத்துகின்ற பிரச்சாரமாகும். இவ்வாறு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் செய்தியாளர்களிடம் கூறினார்.

# எடப்பாடி ஊழல் பற்றிப் பேசலாமா

தேர்தல் பிரச்சாரம் செய்து வரும் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, நாளுக்கு நாள் தரம்தாழ்ந்து பேசி வருகிறார். எதிர்க்கட்சித் தலைவர் மு.க. ஸ்டாலினை ‘நீ, வா, போ’ என்று ஒருமையில் பேசத் தொடங்கி விட்டார். ‘தமிழ் இந்து’ நாளேடு வெளியிட்டுள்ள கட்டுரை ஒன்றும் இதை சுட்டிக்காட்டியுள்ளது. முதலமைச்சரை மட்டும் குறை சொல்லிவிட்டதாக எவரும் கருதி விடக் கூடாது என்பதற்காக மு.க. ஸ்டாலினும் தரக்குறைவாகப் பேசுவதாக அந்த ஏடு எழுதியுள்ளது. எங்கே, எந்தக் கூட்டத்தில் மு.க. ஸ்டாலின் அப்படித் தரம் தாழந்து ஒருமையில் பேசினார் என்பதை நேர்மையோடு எடுத்துக்காட்ட அந்த ஏடு தயாராக இல்லை.

தி.மு.க. ஆட்சி - ஊழல் ஆட்சியை நடத்தியதாக எடப்பாடி பழனிச்சாமி பேசி வருகிறார். காக்னிசன்ட் என்ற அமெரிக்க நிறுவனம், தமிழ்நாட்டில் அதன் கிளையைத் தொடங்க தமிழக ஆட்சியாளர்களுக்கு 20 இலட்சம் டாலர் இலஞ்சம் கொடுத்த செய்தி அமெரிக்க நீதிமன்றத்தில் அம்பலமாகி அதற்காக அந்நாட்டு நீதிமன்றம் அந்த நிறுவனத்துக்கு 2.5 கோடி டாலர் தொகையைவிட அதாவது 10 மடங்குக்கும் கூடுதலாக அபராதம் விதித்திருக்கிறது.

தமிழக அரசின் ஊழல் நாற்றம் அமெரிக்காவில் நாறிக் கொண்டிருக்கிறது. மற்றொரு செய்தியையும் சுட்டிக் காட்ட வேண்டும்.

பிரதமர், முதல்வர், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் மீதான ஊழல் புகார்களை விசாரிக்கும் ‘லோக் ஆயுக்தா’ என்ற அமைப்பை உச்சநீதிமன்றம் கெடு விதித்த காரணத்தால் வேறு வழியின்றி கடந்த ஜூலை மாதம் தமிழக சட்டப் பேரவையில் இதற்கான சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்த அமைப்பில் கட்சிக்காரர்களை நியமிக்கக் கூடாது என்பது சட்டம். ஆனால் எடப்பாடி உருவாக்கிய ஊழல் ஒழிப்பு விசாரணைக் குழுவில் கோவை மாவட்ட அ.தி.மு.க. வழக்கறிஞர் அணி செயலாளரான ஆறுமுகம் என்பவர் நியமிக்கப்பட்டார். அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் உறுப்பினராக இருந்து ஓய்வு பெற்றவர்கள் அதற்குப் பிறகு வேறு எந்தப் பணியிலும் இருக்கக் கூடாது என்ற விதிகளுக்கு மாறாக ஆணையத்தில் உறுப்பினராக இருந்து ஓய்வு பெற்ற இராஜாராம் என்ற அய்.ஏ.எஸ். அதிகாரி, இந்தக் குழுவில் நியமிக்கப்பட்டார். இந்த இரண்டு நியமனங்களும் செல்லாது என்று மதுரை உயர்நீதிமன்றக் கிளை கடந்த ஏப்ரல் 5ஆம் தேதி உத்தரவிட்டுள்ளது. இவர்கள் ஊழலைப் பற்றி பேசலாமா?

# மோடியின் அடுக்கடுக்கான ‘பொய்’ (2)

*மோடி பேசி வரும் பொய்களின் ஒரு தொகுப்பு, இது.*

### 600 கோடி ஓட்டு: மோடி

*உலக பொருளாதார மன்றத்தில் உரையாற்றிய மோடி, கடந்த 30 ஆண்டுகளில் முதன்முறையாக 600 கோடி மக்கள் ஓட்டு போட்டு என்னை பிரதமராக தேர்வு செய்திருக்கிறார்கள் என்றார்.*

*இந்தியாவின் மக்கள் தொகையே 120 கோடி மட்டும் தான். அதிலும் ஓட்டு போடும் மக்கள் 80 கோடி பேர் தான். இந்த 80 கோடி பேரில் 600 கோடி ஓட்டு பெற்று பிரதமர் ஆனதாக மோடி குறிப்பிடுகிறார். இப்படியொரு அறிவாளி பிரதமரை இந்தியா கொண்டிருப்பதற்கு என்ன தவம் செய்ததோ!*

### குஜராத்திலிருந்து முதல் பிரதமர்: மோடியின் பொய்

*குஜராத்திலிருந்து பிரதமராகும் முதல் நபர் தான் மட்டுமே என மோடி தனது தேர்தல் பிரச்சாரத்தின்போது கூறினார். ஆனால் உண்மை? இந்தியாவின் வரலாற்றில் நான்காவது பிரதமராக மொரார்ஜி தேசாய் குஜராத்திலிருந்து வந்தவர் தான். ஆனால் மோடி தன்னை குஜராத்திலிருந்து வந்த முதலாவது பிரதமர் என்று பொய் கூறி குஜராத் மக்களின் அனுதாபத்தை பெற முயற்சிக்கிறார்.*

### காங்கிரஸ் தலித் பாரபட்சம் – மோடி பொய்

*மோடி தனது கர்நாடக பிரச்சாரத்தின் போது, காங்கிரஸ் கட்சி, ஒரு தலித் குடியரசு தலைவராக வந்துவிட்ட காரணத்தாலேயே ஒரு வாழ்த்துகூட சொல்லவில்லை. அப்படிப்பட்ட தலித் விரோத கட்சி காங்கிரஸ் என பேசினார். ஆனால் உண்மை?*

*குடியரசு தலைவராக ராம்நாத் கோவிந்த் பதவியேற்ற நாளிலேயே காங்கிரஸ் தலைவர்கள் சோனியா, ராகுல், மன்மோகன் என அனைவருமே வாழ்த்து கூறினர்.*

*நாட்டில் எந்த கட்சி பிரதமர் பதவி ஏற்றுக் கொண்டாலும் எதிர்க்கட்சி சார்பாக வாழ்த்துக்கள் சொல்வது காலங்காலமாக நடந்து வரும் இயல்பு. இந்த நடைமுறையை கூட காங்கிரஸ் பின்பற்ற வில்லை. நான் பதவியேற்ற போது வாழ்த்துகூட சொல்ல வில்லை என்று மோடி தேர்தல் பேரணியில் புலம்பினார். ஆனால், உண்மையில் மோடி பதவியேற்றபோதே காங்கிரஸ் கட்சியினர் மோடிக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.*

### நேரு, ஜெனரல் திம்மய்யாவை அவமானப்படுத்தினார் – மோடியின் பொய்

*மோடி தனது தேர்தல் பிரச்சாரத்தில் 1948இல் நடந்த பாகிஸ்தான் போரில் வெற்றிக்கு காரணமாக இருந்த ஜெனரல் திம்மய்யா அவர்களை நேருவும், அப்போதைய பாதுகாப்புத்துறை அமைச்சராக இருந்த கிருஷ்ணமேனன் அவர்களும் அவமானப் படுத்தினார்கள் என்றார். ஆனால், உண்மை?*

*1948 போரின்போது பாகிஸ்தான் போரை வென்று கொடுத்ததாகக் கூறும் ஜெனரல் திம்மய்யா, ஜெனரலாக பதவி ஏற்றுக் கொண்டதே மே 1957ஆம் ஆண்டு தான். ஆம், 1957இல் ஜெனரலாக பதவி ஏற்றுக் கொண்டவரைத் தான் 1948 போரின் வெற்றிக்குக் காரணம் என்று மோடி குறிப்பிட்டார். அதேபோல் பாதுகாப்பு அமைச்சரான கிருஷ்ணமேனன் பதவிக் காலம் 1957-1962. இருவருக்குமே 1948இல் நடந்த பாகிஸ்தான் உடனான போருக்கும் சம்பந்தம் இல்லை.*

### பட்டேல் பிரதமராக இருந்தால் முழு காஷ்மீரகமும் நமது – மோடியின் பொய்

*நேருவுக்கு பதிலாக பட்டேல் பிரதமராக இருந்திருந்தால் முழு காஷ்மீரும் இந்தியா வுடன் தான் இருந்திருக்கும் என்று தனது தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசினார் மோடி. ஆனால், வரலாற்றாசிரியர்கள் அப்போது பட்டேலுடைய நிலைப்பாட்டைக் கூறி மோடியின் பொய்ப் பிரச்சாரத்தை முறியடித்தனர்.*

*ஸ்ரீநாத் ராகவன், முன்னாள் இராணுவ அதிகாரி மற்றும் வரலாற்று நிபுணர். அவர் சொல்லும்போது பட்டேல் காஷ்மீரை விட்டுக் கொடுத்து ஜுனாகத் மற்றும் ஹைதராபாத் பகுதியை இந்தியாவுடன் இணைப்பதையே விரும்பினார் என்று சொல்கிறார்.*



*பட்டேல் மற்றும் பாகிஸ்தானின் முதல் பிரதமர் லியாகத் அலிகான் இடையே நடைபெற்ற உரையாடலில் பட்டேல், காஷ்மீரத்தை பாகிஸ்தானுக்கு கொடுப்பதற்கு தயாராக இருந்தது தெரிய வருகிறது.*

*வரலாற்றாசிரியர் ராகவன், இத்தோடு நிற்காமல் இன்னொரு தகவலையும் சொல்கிறார். இரு நாடு என்ற பிரிவினை கொள்கையை ஜின்னாவிற்கு 16 ஆண்டுகளுக்கு முன்பே ஆர்.எஸ்.எஸ். தலைவர் சவார்க்கர் எழுப்பத் தொடங்கினார். ஆனால் மோடி பிரிவினை மீதான பழியை காங்கிரஸ் மீது போட்டு வெறுப்புப் பிரச்சாரத்தை கட்டமைக்கிறார். (தி க்யூண்ட் 8.2.18)*

### காங்கிரஸ் தலைவர்கள் பகத்சிங்கை சந்திக்கவில்லை – மோடியின் பொய்

*விடுதலைப் போராட்ட வீரர் பகத்சிங் ஆங்கில அரசால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கும்போது காங்கிரஸ் தலைவர்கள் ஒருவர்கூட பகத்சிங்கை நேரில் சந்திக்கவில்லை. விடுதலை வீரர்களுக்கான மரியாதையையும் காங்கிரஸ் செலுத்தவில்லை என்றும் மோடி தேர்தல் பிரச்சாரத்தில் பேசினார்.*

*பிரதமர் நேருவும் முக்கியமான காங்கிரஸ் தலைவர்களும் இணைந்து சென்று பகத்சிங்கை நேரில் சிறையில் சந்திக்கிறார்கள். அது மட்டுமல்ல; நேரு பகத்சிங்கிற்கு கடிதங்கள் மூலமும் தொடர்பு கொள்கிறார். பகத்சிங் உடன் நடந்த உரையாடலைக் கூட தனது புத்தகத்தில் பதிவு செய்திருக்கிறார். ஆக மோடி கூறிய அப்பட்டமான பொய்களில் இதுவும் ஒன்று.*

### கடந்த நான்கு ஆண்டுகளில் 35 ஏர்போர்ட்கள் – மோடியின் பொய்

*மோடி தனது தேர்தல் பிரச்சாரத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் தனது ஆட்சியின் கீழ் மொத்தம் 35 ஏர்ப்போர்ட்கள் கட்டப்பட்டிருப்பதாகவும், வருடத்திற்கு 9 ஏர்போர்ட்கள் என கட்டும் பணி விரைவாக நடை பெற்றதாகக் கூறினார். ஆனால் உண்மை?*

*மோடியின் ஆட்சியின் கீழ் மொத்தம் வருடத்திற்கு இரண்டு ஏர்போர்ட்கள் என மொத்தம் 7 ஏர்போர்ட்கள் தான் கட்டும் பணி நடந்து வருகிறது. எப்போதும் போல எண்ணிக்கையில் பஞ்சம் பார்க்காமல் தனக்குப் பிடித்த நம்பரை சொல்லி விட்டார் மோடி அவ்வளவுதான்.*

### பா.ஜ.க. ஆட்சியின் கீழ் கலவரங்கள் இல்லை: அமித்ஷா

*அமித்ஷா, ஜீ செய்தி ஊடகத்திற்கு பேட்டி கொடுக்கும்போது, இதுவரை பா.ஜ.க. ஆட்சி செய்த மாநிலங்களில் கலவரங்கள் இல்லாத நிலை உருவாகியிருக்கிறது. குஜராத்தில் 27 வருட ஆட்சியில் இருந்திருக்கிறோம். மத்திய பிரதேசத்தில் 15 வருட ஆட்சி, சத்திஸ்கரில் 15 வருட ஆட்சி இந்த மூன்று மாநிலங்களில் நாங்கள் பதவிக்கு வந்த பிறகு ஒரு கலவரம் கூட உருவாகவில்லை என்று கூறினார். ஆனால் உண்மை?*

*குஜராத் சொல்ல வேண்டிய அவசிய மில்லை. 2002 குஜராத் கலவரம் பல்லாயிரம் முஸ்லிம்களை கொன்று குவித்ததில் அரசே முன்னிலையில் நின்றது. தேசிய குற்றங்கள் பதிவு ஆணையத்தின் அறிக்கையின்படி மத்தியப் பிரதேசத்தில் மட்டும் 2003-2016 காலகட்டத்தில் 32,050 கலவரங்கள் நடந்திருக்கிறது. சத்திஸ்கர் மாநிலத்தில் 2003-2016 காலகட்டத்தில் 12,265 கலவரங்கள் பதிவாகியிருக்கிறது.*

*இந்த நிலையில் அமித்ஷா பா.ஜ.க. ஆட்சிக்குள்ளான பகுதியில் ஒரு கலவரம்கூட உருவானதில்லை என்று பொய் பேசுகிறார்.*

### ஒரு கலவரம்கூட கிடையாது – யோகியின் பொய்

*தான் உத்திரபிரதேசத்தின் முதல்வராக பதவியேற்ற பிறகு தனது மாநிலத்தில் ஒரு கலவரம்கூட நடக்கவில்லை என்று மேடைகளில் பேசுகிறார் யோகி. ஆனால் உண்மை என்ன? உத்திரபிரதேச மாநிலத்தின் உள்துறை அமைச்சகம் 2017ஆம் ஆண்டில் மட்டும் 195 கலவரங்கள் பதிவாகியுள்ளதாக அறிக்கை தாக்கல் செய்திருக்கிறது.*

*மாநில அமைச்சகத்தின் ஆவணம் ஒரு தகவலைச் சொல்லும். ஆனால் யோகி, மோடி, பா.ஜ.க.வினர் தனக்கு தோன்றுவதை மக்களிடம் பேசி உண்மையை மறைத்து விடுகின்றனர்.*

### 2500 ஆண்டுக்கு முன் ஜனநாயகம் – மோடியின் பொய்

*இந்தியாவில் 2500 ஆண்டுகளுக்கு முன்னதாகவே வடக்குப் பகுதியில் உள்ள பீகாரை ஆட்சி செய்த லிச்சவி என்ற அரசர் ஜனநாயக முறையைக் கொண்டு வந்து விட்டார். அதனை சுதந்திரத்திற்குப் பிறகு காங்கிரஸ் கெடுத்து நாட்டை நாசமாக்கியது என்று மோடி தனது பிரச்சார மேடையில் பேசினார். உண்மை என்ன?*

*மோடி மற்றும் சங்பரிவார அமைப்புகள் விரும்புவது எல்லாம் லிச்சவி அரசரால் கொண்டு வரப்பட்ட ஜனநாயக முறைதான். அதனையே மீண்டும் கொண்டு வந்தாக வேண்டும் என்று வேலை செய்கிறார்கள். அப்படி என்ன ஜனநாயகம் லிச்சவி மன்னரால் கொண்டு வரப்பட்டது?*

*லிச்சவி மன்னர் எல்லா மன்னர்களையும் போல வாரிசு முறையிலோ அல்லது தகுதியின் அடிப்படையிலோ ஆட்சியில் அமர்வதை விரும்பவில்லை. அதனால் மக்கள் தேர்ந்தெடுக்கும் முறையை அறிமுகப்படுத்தினார். அவரைப் பொறுத்தமட்டில் தன் அரசவையில் இருக்கும் உயர்சாதிக்காரர்கள் மட்டுமே மக்கள்.*

*அதனால் அவர்கள் மட்டும் முடிவு செய்து அரசரைத் தேர்ந்தெடுக்கும் பழக்கம் உருவாக்கப் பட்டது. அதாவது, எளிய மக்களுக்கு எதிராகவே சிந்தித்த, அடிமைப்படுத்திய மனிதர்கள் இணைந்து அரசரைத் தேர்ந்தெடுப்பது. இதனையே மோடி ஜனநாயக முறை என்கிறார்.*

*இப்படியொரு ஜனநாயக முறையில் தேர்தல் நடந்தால் மீண்டும் சாதிய வட்டத்திற்குள் இந்தியா புகுந்து 3 சதவீதம் மட்டும் உள்ள பார்ப்பனர்களுக்கு ஒட்டு மொத்தமாக மற்றவர்கள் அடிமையாக இருக்க வேண்டியது தான். இந்த முறையை கொண்டு வராமல் நாட்டை சீரழித்து விட்டது காங்கிரஸ் என்கிறார் மோடி. (ஸ்க்ரால் 9.2.18)*

**நன்றி : ‘வைகறை வெளிச்சம்’ இதழ்**

## பா.ஜ.க. தேர்தல் அறிக்கை : தமிழிசை தடுமாறுகிறார்

*இராமர் கோயில் கட்டுவோம்; சமஸ்கிருதத்தைப் பள்ளிப் பாடமாக்குவோம் என்கிறது பா.ஜ.க. தேர்தல் அறிக்கை. ‘நீட்’ குறித்து மவுனம் சாதிக்கிறது. தமிழிசையிடம் இது குறித்து செய்தியாளர் கேட்டபோது நீட் பிரச்சினை உச்சநீதிமன்றத்தில் இருக்கிறது என்று சமாதானம் கூறியிருக்கிறார்.*

*சபரிமலை கோயிலுக்குள் அனைத்துப் பெண்களையும் அனுமதிக்கலாம் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்த பிறகும் சபரிமலையில் பாரம்பரிய முறையை மீறக் கூடாது என்று உச்சநீதிமன்றத்தில் தெரிவிக்கப் போவதாக இதே தேர்தல் அறிக்கைதான் கூறுகிறது. இதற்கு தமிழிசையிடம் பதில் உண்டா?*

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# காவிரி: பா.ஜ.க.வின் துரோகங்கள், நினைவிருக்கிறதா?

*காவிரிப் பிரச்சினையில் நடுவண் ஆட்சி பச்சையாக – தனது தேர்தல் அரசியல் நலனுக்காக தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளை திட்டமிட்டு துரோகம் செய்ததை மறக்க முடியுமா?*

- *16.2.2018 அன்று உச்சநீதிமன்றம் அளித்த இறுதித் தீர்ப்பில், “6 வாரங்களுக்குள் காவிரி மேலாண்மை வாரியத்தை மத்திய அரசு அமைக்க வேண்டும் - இந்த 6 வார காலக்கெடு எக்காரணம் கொண்டும் நீட்டிக்கப்பட மாட்டாது” என்று திட்டவட்டமாகக் கூறியிருந்தது.* (It is hereby made clear that no extension shall be granted for framing the scheme on any ground - *தீர்ப்பு பக்.451)*
- *6 வார காலத்துக்குள் தீர்ப்பை அமுல்படுத்த முடியாது என்று தமிழகம் வந்த மத்திய அமைச்சர்கள் பேட்டி அளித்தனர். தீர்ப்பை செயல்படுத்த வேண்டிய மத்திய நீர்வளத் துறை செயலாளரும் இதே போன்ற கருத்துகளையே வெளியிட்டார்.*
- *6 வாரக் கெடு முடியும் வரை மத்திய அரசு தீர்ப்பை அமுல்படுத்த எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.*
- *தமிழ்நாட்டில் பா.ஜ.க. தலைவர்களும் ஊடகங்களில் விவாதத்தில் பேசிய பா.ஜ.க. ‘பிரச்சாரகர்களும்’ கெடு முடிவதற்குள் நிச்சயம் காவிரி மேலாண்மை வாரியத்தை அமைப்போம் என்று நீட்டி முழங்கினர்.*
- *உச்சநீதிமன்றம் தனது இறுதித் தீர்ப்பில் காவிரி மேலாண்மை வாரியம் என்று குறிப்பிடவில்லை. ‘ஸ்கீம்’ என்றே குறிப்பிட் டிருக்கிறது என்று கருநாடக அரசு எடுத்துக் கொடுத்த ‘விதண்டாவாதத்தை’ பா.ஜ.க. ஆட்சியும் அப்படியே பற்றிக் கொண்டது. கருநாடகத் தேர்தலில் தங்கள் கட்சி வெற்றி பெற வேண்டும் என்றால் இந்தப் பிரச்சினை கிடப்பில் போட்டாக வேண்டும் என்பதே நடுவண் ஆட்சியின் நோக்கம்.*
- *‘ஸ்கீம்’ (செயல் முறை) என்று உச்சநீதிமன்றம் தனது இறுதித் தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கும் வார்த்தை காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதையும் உள்ளடக்கியதுதான் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா நடுவண் அரசு மீதான தமிழ்நாடு அரசு அவமதிப்பு வழக்கிற்கான மனுத்தாக்கலின்போது வாய்மொழியாகக் கருத்து தெரிவித்திருக்கிறார்.*
- *பா.ஜ.க. ஆட்சி துரோகத்தைக் கண்டித்து அதன் மீது அவமதிப்பு வழக்கு தொடர்ந்த எடப்பாடி ஆட்சி தான் இப்போது ‘மோடி எங்கள் டாடி’ என்று கொஞ்சிக் குலாவுகிறது! தமிழகத்துக்கு துரோகம் அமைக்க மோடிக்கு எதிராக ‘கோ பேக் மோடி?’ என்று தமிழகமே கொதித்து எழுந்ததை மறக்க முடியுமா?*
- *மாநிலங்களுக்கிடையிலான நதிநீரைப் பகிர்ந்து கொள்வது குறித்து 1956ஆம் ஆண்டு ஒரு சட்டம் நடுவண் அரசால் உருவாக்கப்பட்டது. இந்தச் சட்டத்தில் சர்க்காரியா ஆணையம் அளித்த பரிந்துரையின் அடிப்படையில் திருத்தம் செய்யப்பட்டு 6ஏ(2) என்ற பிரிவு சேர்க்கப்பட்டது. இந்தப் பிரிவு ‘ஸ்கீம்’ என்ற சொல், ‘ஆணையம்’* (authority) *என்பதையே குறிக்கும் என்று தெளிவாக விளக்கமளிக்கிறது. (சர்க்காரியா ஆணையம் என்பது இந்திரா பிரதமராக இருந்தபோது மத்திய மாநில உறவுகள், அதிகாரப் பகிர்வுகள் குறித்து ஆராய அமைக்கப்பட்ட ஆணையம்)*
- *காவிரிப் பிரச்சினைக்காக அமைக்கப்பட்ட காவிரி நடுவர் மன்றம் தனது இறுதித் தீர்ப்பில் என்ன கூறியது? காவிரி நீர்ப் பங்கீட்டை செயல்படுத்தக் கூடிய அதிகாரங்களைக் கொண்ட ஆணையம் - அதாவது மாநிலங்களின் செயல்பாடுகளில் மேலாண்மை செலுத்தக் கூடிய வாரியம் ஒன்றை அமைக்க வேண்டும் என்றும் கூறியதோடு, அது ‘பக்ரா-பியாஸ்’ நதி நீர்* **மேலாண்மை வாரியம்** *போல் இருக்க வேண்டும் என்றும் தெளிவாக விளக்கியிருக்கிறது.*
- *உச்சநீதிமன்றமும் தனது இறுதித் தீர்ப்பில் மேற்குறிப்பிட்ட காவிரி நடுவர் மன்றம்* (Tribunal) *குறிப்பிட்ட மேலாண்மை வாரியம் பற்றியும், அது எப்படி, எவரைக் கொண்டு அமைக்கப்பட வேண்டும் என்பவை குறித்தும் கூட்டங்கள் நடத்தும் முறைகள் குறித்தும் உச்சநீதிமன்றம் விளக்கியிருக்கிறது. (தீர்ப்பு பக்கம் 337 - பத்தி 290) 2016ஆம் ஆண்டு இதே உச்சநீதிமன்றம், ‘காவிரி மேலாண்மை வாரியம்’ அமைக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தபோது பா.ஜ.க. நடுவண் அரசு அதை எதிர்த்தது. அப்படி உத்தரவிட உச்சநீதிமன்றத்துக்கு உரிமை கிடையாது என்று பா.ஜ.க. ஆட்சி பதிலளித்தது.*
- *கருநாடகத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளி வந்துள்ள நிலையில், காவிரிப் பிரச்சினையில் நடுவண் ஆட்சி முடிவெடுக்க எந்தத் தடையும் இல்லை என்று தேர்தல் ஆணையரே கூறியிருக்கிறார். ஆனால் தேர்தல் நேரத்தில் காவிரி மேலாண்மை வாரியத்தை அமைத்தால் கருநாடகத்தில் ‘சட்டம் ஒழுங்கு சீர்கெடும்’ என்று நடுவண் ஆட்சி உச்சநீதிமன்றத்தில் மனு போட்டது.*
- *காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதை கருநாடக அரசு எதிர்ப்பது உச்சநீதிமன்றத் தீர்ப்பை மறுக்கும் செயல்பாடு; இதை தேச விரோத நடவடிக்கை; தேச விரோதி என்று கூற பா.ஜ.க. தயாராக இல்லை. ஆனால் தமிழர்கள் இந்தியை எதிர்த்தால் தேசவிரோதி; ‘நீட்’டை எதிர்த்தால் ‘தேச’ விரோதி; ‘ஜி.எஸ்.டி.’யை எதிர்த்தால் ‘தேச விரோதி’, தமிழக உரிமைக்காக மெரினாவில் திரண்டவர்கள் ‘தேச விரோதி’ என்று தமிழக பா.ஜ.க. தலைவர்கள் தமிழர்களை குற்றக் கூண்டில் நிறுத்துகிறார்கள்.*
- *காவிரிப் பிரச்சனையில் மோடி ஆட்சி உச்சநீதிமன்றத்தை அவமதிக் கிறது என்று அவமதிப்பு வழக்கு தொடர்ந்தது அ.இ.அ.தி.மு.க. ஆட்சி. இப்போது மீண்டும் மோடிதான் பிரதமராக வேண்டும் என்று ஓட்டு கேட்கிறார்கள்.*

# வெறுப்பு அரசியல் நடத்தும் பா.ஜ.க.: 200 எழுத்தாளர்கள் கூட்டறிக்கை

*வரலாற்று ஆசிரியர் ரொமிலா தாப்பர், ஞானபீட விருதுபெற்ற எழுத்தாளர் அமிதவ் கோஷ், ‘புக்கர்’ விருதுபெற்ற எழுத்தாளர் அருந்ததி ராய், எழுத்தாளர்கள் நயன்தாரா சாகல், ஜெர்ரி பிரின்டோ, ஆனந்த் டெல்டும்டே, நாடகாசிரியர் கிரிஷ் கர்னாட், பி. சிவகாமி, விஜயலட்சுமி, விஜய்பிரசாத் முதலான 200 எழுத்தாளர்கள் கையெழுத்திட்டு, இந்தி, ஆங்கிலம், தமிழ், பஞ்சாபி, மராத்தி, குஜராத்தி, வங்காளம், மலையாளம், கன்னடம், தெலுங்கு, உருது, காஷ்மீரி உள்ளிட்ட மொழிகளில் தங்களின் வேண்டுகோளை அறிக்கையாக வெளியிட்டுள்ளனர்.*

*அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:*

*நமது அரசமைப்புச் சட்டம், நாட்டின்குடிமக்கள் அனைவருக்கும் சம உரிமைகளை உத்தரவாதப்படுத்தி இருக்கிறது. தாங்கள் விரும்பியபடி சாப்பிடுவதற்கான உரிமை, வழிபடுவதற்கான உரிமை மற்றும் வாழ்வதற்கான உரிமையை அனைவருக்கும் சமமாக வழங்கியிருக்கிறது. அதேபோன்று ஆட்சியிலிருப்போரின் கருத்துக்களை விமர்சிப்பதற்கான பேச்சுரிமையையும் வழங்கியிருக்கிறது.*

*ஆனால், கடந்த சில ஆண்டுகளாக மதத்தின் பேராலும், சாதியின் பேராலும், வேறொரு மாநிலத்தைச் சேர்ந்தவன் என்று பாகுபாடு ஏற்படுத்தியும், குடிமக்கள் தாக்கப்படும் மற்றும் கொல்லப்படும் கொடூரமான நிகழ்வுகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.*

*மக்களைப் பிரித்தாள்வதற்கும், மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்துவதற்கும், நாட்டின் பெரும்பகுதியினரை- அவர்களை முழுமையான பிரஜைகளாக வாழ முடியாத வகையில் ஒதுக்கிவைப்பதற்கும் இந்த வெறுப்பு அரசியல் விதைக்கப்பட்டு வருகிறது.*

*எழுத்தாளர்கள், கலைஞர்கள், திரைப்படத் தயாரிப்பாளர்கள், இசைஞர்கள் மற்றும் பண்பாட்டு அறிஞர்கள் வேட்டையாடப்பட்டு வருகின்றனர். மிரட்டப்படுகின்றனர். தணிக்கைக்கு உட்படுத்தப்படுகின்றனர். ஆட்சியிலிருப்பவர்களைக் கேள்வி கேட்பவர்கள், எவராக இருந்தாலும், அவர்கள் பொய்யான அல்லது கேலிக்கூத்தான விதத்தில் குற்றம் சாட்டப்பட்டு துன்புறுத்தப்படுவார்கள் என்ற அச்சத்தை ஏற்படுத்தி இருக்கின்றனர்.*

*இவை அனைத்தும் மாற வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். பகுத்தறிவாளர்கள், எழுத்தாளர்கள், செயற் பாட்டாளர்கள் வேட்டையாடப் படக்கூடாது அல்லது படுகொலை செய்யப் படக்கூடாது; பெண்கள், தலித்துகள், பழங்குடியினர் மற்றும் முஸ்லிம் சிறுபான்மையினருக்கு எதிராக வன்முறை வெறியாட்டங்களில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்என்று நாங்கள் விரும்புகிறோம்.*

*வேலை, கல்வி, ஆராய்ச்சி, சுகாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றில் அனைவருக்கும் சம வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும் என்றும் கருதுகிறோம்.*

*எனவேதான், நடைபெறவிருக்கும் தேர்தல் மிகவும் முக்கியமான தேர்தல்என்பதை உணர்ந்து, நம்மை பிரித்தாளும் சூழ்ச்சிக்கு எதிராக வாக்களிப்போம்; வன்முறை வெறியாட்டங்களுக்கு எதிராக வாக்களிப்போம்; நாட்டின் பன்முகத்தன்மையைப் பாதுகாக்க, சமத்துவத்தைப் பாதுகாக்க வாக்களிப்போம் என்று மக்கள் முன்பு எங்களின் அறைகூவலை முன்வைக்கிறோம்.*

*நம் அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க இது ஒன்றே வழியாகும்.*

*இவ்வாறு எழுத்தாளர்கள் கூறியுள்ளனர்.*

## கதிர் முகிலன் – நஜ்முன்னிசா இணையேற்பு



*திருப்பூர் திராவிடர் விடுதலைக் கழக மாவட்டத் தலைவர் முகில் இராசு, தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி ஆகியோர் மகன் கதிர் முகிலனுக்கும், திருப்பூர் அப்துல் ஜப்பார் – சுபைதா பேகம் ஆகியோரின் மகள் நஜ் முன்னிசாவிற்கும் 3.4.2019 அன்று மேட்டூர் பெரியார் படிப்பகத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் வாழ்க்கை இணையேற்பு நடைபெற்றது. இது மத மறுப்புத் திருமணமாகும்.*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 11th April 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN